# இலக்கியம் கற்பித்தலின் அணுகுமுறைகள் Teaching Approaches of Literature

முனைவர் ந. சுபா | Dr.N.Shubha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்-8,
Mob: 97917 97869, Email: drnshubharameshpondi@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கற்றல் - கற்பித்தல் திட்டத்தை - செயல்பாட்டை வெற்றியடையச் செய்பவர் ஆசிரியரே ஆவர். ஆசிரியர் என்போர் நாளும் கற்பவர்; கற்பிப்பவர்; மாணவர்களைக் கற்கத் தூண்டுபவர் என்பது அனைவரும் அறிந்ததே. மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை வெளிக்கொணர்பவர்; புதிய உத்திகளைக் கற்பித்தலில் புகுத்துபவர்; மாணவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுபவர்; நல்ல மாணவரை உருவாக்க மானுடம் கற்பித்து சமூகப் பொறுப்புகளை எடுத்துரைக்கக் கூடியவராக ஆசிரியர் விளங்குகிறார். இத்தனை பரிமாணங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களால்தான் தனது கற்பித்தல் தொழிலில் வெற்றி அடைய முடியும்.

குறிப்பாக, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் இலக்கியம் ஏன் கற்பிக்கப்படுகிறது? அதன் முக்கியத்துவம் என்ன? இலக்கியம் எவ்வகையில் பயன்படுகிறது? எவ்வாறு கற்பிக்கப்பட வேண்டும்? என்ற செய்திகள் குறித்த தெளிவு இன்றி இலக்கியம் கற்பிக்க எந்தவித அணுகுமுறையும் மேற்கொள்ள முடியாது. இக்கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை இங்கு முன்வைக்கப்படுகிறது.

**Abstract**

Learning – Teaching methods put forth into action only by the teaching fraternity. It is a well known fact that a teacher is a learned personality who learns throughout their life, teaches till their end, motivates students to learn well. He introduces new techniques, modules in the learning process, and paves a way for the virtual growth of the students. His teaching becomes universal since he teaches from heart and creates a responsible human to the world. All these factors, add more dimensions to make him the best and also a successful teacher.

The teacher one who teaches literature always stands par excellence because he has to impart the main purpose of teaching literature, the significance of it and how far one could make use of it, unless he does, one can not inculcate the soulful touch of literature. In view of all this very concept, the theme of the study has put forth into a research article.

**திறவுச்சொற்கள் (Keywords):** கற்றல், கற்பித்தல், மாணவர்கள், ஆசிரியர், இலக்கியக்கல்வி, ஆளுமைப் பண்புகள், இலக்கியம், அணுகுமுறை, பரிமாணங்கள், கருத்தியல், Learning, Teaching, Personality, motivate students, new techniques, Modules, Literature.

## முன்னுரை

கற்பித்தல் என்பது பல திறன்களை உள்ளடக்கியது. வகுப்பறையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஆசிரியர் கல்வியின் அவசியம், கற்கும் முறை, அறிவுத்திறன் போன்ற அடிப்படைக் கூறுகளை மாணவர்களுக்குக் கொடுக்கும் விதமாகக் கற்பித்தலை அணுகுகிறார். குறிப்பாக, தாங்கள் ஏற்கனவே அறிந்தவை, பெற்ற அறிவு இவற்றோடு புதிய தகவல்களையும் சேர்த்துக் கற்பிக்கிற பொழுது மாணவர்களுக்குப் புதிய புரிதல்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இந்த வகையில் மாணவர்களின் சிந்தனை தூண்டப்படவும், தனித்திறமைகளை வெளிக்கொணரவும் வழியுண்டு.

இலக்கியக் கல்வி கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு மிகப்பெரிது. அவ்விலக்கியக் கல்வி மாணவர்களிடையே (i) காலந்தோறும் இலக்கியம் கூறும் இலக்குகள் என்னென்ன? (ii) இலக்கியக் கல்வி மனித நடத்தைகள் பற்றிய புரிதல் உணர்வை முன்வைத்தல், (iii) அழகியல் உணர்வை வளர்க்கச் செய்தல் (iv) மனிதப் பண்புகளை வலுவுடன் எடுத்துரைத்தல், (v) இலக்கியத்தை மனித நடைமுறைப் பண்பாட்டோடு கற்பித்தல்...... இதுபோன்ற கருத்தியல்களை உள்வாங்கிக் கொண்டு இலக்கியங்களை இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றாற்போல் புதுவித திறனாய்வுக் கோட்பாட்டுடன் பொருத்தியும் தொழில்நுட்ப உதவியுடன் கற்பித்தும் வந்தால் மாணவர்களுக்கு இலக்கியம் கற்கும் ஆர்வம் ஏற்படுவதுடன் ஆய்வுச் சிந்தனையும் வளரும். அடிப்படையான இக்கூறுகளை முன்வைத்து இக்கட்டுரை அமைகிறது.

## கற்றலின் அவசியம்

கற்றல் என்பது மனிதனது அனைத்து திறன்களை வெளிக்கொணரும் தன்மை கொண்டது. கற்றலின் அடிப்படைக்கூறு கல்வியே. அந்தக் கல்வி எந்தத் துறையானாலும் குறிப்பாக, இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம் போன்றவற்றை அறிந்து கொள்ளக்கூடிய கல்வியாக இருக்கலாம். அதனால் கல்வி கற்றல் என்பது சமூகத்தில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ. . . அத்தகைய கல்விதான் நமக்கு தேவை" என்கிற சுவாமி விவேகானந்தரின் கூற்று (தெ.செல்வராசு, இலக்கியமும், வாழ்வியலும், ப.79) கல்வி கற்பதின் அவசியத்தைக் காட்டுகிறது.

கற்றல்தான் ஒரு மனிதனின் அறிவை - வாழ்க்கையை வளமாக்குவது. தனி ஒருவனின் அறிவு மற்றும் திறன்கள் கற்றலில் இருந்துதான் பெறப்படுகிறது. கல்வியின் குறிக்கோள்கள் என்னென்ன? கற்றல் அனுபவத்தின் பயன்கள் எப்படிப்பட்டது? கற்றலினால் ஏற்படும் மதிப்பீடுகள் எவை? என்பன குறித்துக் கற்றல் தெளிவாக்குகிறது. இவற்றில் ஒன்றின் வளர்ச்சி தடைபட்டாலும் மற்றவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படும். ஆகவே கற்றலின் அவசியத்தைப் பின்வருமாறு பகுத்துப் பார்க்க முடியும்.

- சமூகம் மற்றும் சூழல் குறித்த அறிவைப் பெறுவதற்கு . . .
- மொழியினுடைய ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு . . .
- மனிதப் பண்புகளை அறிந்து கொள்வதற்கு . . .
- நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கு . . .
- தனிமனித ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு . . .
- நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்வதற்கு. . . கற்பிப்பதற்கு. . .
- தனிமனித திறன்களை வெளிப்படுத்துவதற்கு . . .

இத்தகைய ஆற்றல்கள் நிறைந்ததுதான் கற்றலின் இயல்புகளாகும்.

**கற்பித்தலின் முறைகள்**

கற்றல் என்பது கற்பித்தல் மூலம் நிறைவு பெறுகிறது என்று கூறலாம். "கற்பித்தல் என்பது மற்றவரின் கற்றலுக்கு வழிகாட்டுதல் தொடர்பான செயல்பாடுகளாகும்" - ரேயான்.

"கற்பித்தல் என்பது மற்றவர்கள் கற்க உதவுதல்" - ஆபட்மெமோஹன் (இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (2016-178) "கற்றலும் கற்பித்தலும்", "கற்பிக்கும் தன்மை" - ஜகந்நாதன், ப,19, வலைதளத்திலிருந்து பெறப்பட்டது)

கற்பவர் தன்மைக்கு ஏற்ப கற்பித்தல் முறைகள் வேறுபடும்; ஒவ்வொருவருடைய கற்பித்தல் அணுகுமுறைகள் வேறுபட்டிருக்கும். பொதுவாக, கற்பித்தலானது (i) ஆசிரியர் மையமிட்ட கற்பித்தல், (ii) மாணவர் மையமிட்ட கற்பித்தல் என இரண்டு அணுகுமுறைகளில் அமைகின்றன.(கற்பித்தல் முறை....விக்கிபீடியாவிலிருந்து பெறப்பட்ட கருத்து. )

**(i) ஆசிரியரை மையமிட்ட கற்பித்தல்**

ஆசிரியரே முதன்மையாக விளங்குகிறார்; வகுப்பில் ஆசிரியரின் நிர்வாகம் முதன்மையானது; வகுப்பறை ஆசிரியரின் கட்டுப்பாட்டில் இருக்கும். கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் ஆசிரியர் கூறுவதைக் கேட்டு கற்பர். தேர்வுகள், பயிற்சி அளித்தல் போன்ற மதிப்பீட்டின் வழி மாணவர்களின் கற்றல் திறம் அறியப்படுகிறது.

**(ii) மாணவரை மையமிட்ட கற்பித்தல்**

இம்முறையில் ஆசிரியரும் கற்க வரும் மாணவரும் சமமாக செயல்படுவார்கள். பாடங்களை எளிதில் புரிய வைக்கும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்தது. மாணவர்களின் புரிதல் திறனுக்கு ஏற்ப கற்பித்தலில் விரிவுரை முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில் ஆசிரியர் மாணவர்களின் மத்தியில் பயிற்றுநராக - வழிநடத்துபவராகச் செயல்பட வேண்டியுள்ளது.

வகுப்பில் கற்க வரும் மாணாக்கர் பல வகை; தமிழிலக்கண நூலான நன்னூலில், "அன்னம் ஆவே மண்ணொடு கிளியே, இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி அன்னர், தலை இடை கடை மாணாக்கர்" (நன்னூல், பொதுப்பாயிரம், நூ.எ.38) என்று மூன்று வகைகளில் மாணவர்கள் இருப்பர் என்று கூறப்படுகிறது. தலைமாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர் என்று வகுப்பில் இருந்தாலும் பாடம் கற்பித்தலில் எந்தவித வேறுபாடின்றி ஒரே மாதிரியான கற்பித்தல் முறையே அனைவருக்கும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இருப்பினும், மாணவர்களை, சுயகற்றல், குழு கற்றல், ஊடகக் கற்றல், அனுபவக் கற்றல், இ-கற்றல் என்ற முறைகளில் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் கற்பிப்பதால் கால் பங்கு அறிவு; தன்னுடன் பயிலும் மாணவருடன் பழகிப் பேசுவதால் கால் பங்கு அறிவு; தான் கற்றதை எடுத்துக் கூறுவதால் அரைப்பங்கு அறிவு என முழுப்பங்கு புலமையும் மாணவன் பெறுகிறான் என்ற நன்னூல் சூத்திரத்தின் வழி (நூ.42,43) ஆசிரியர் மாணவர்களை வழிநடத்திக் கற்றல் செயலில் ஈடுபடுத்த வேண்டும்.

மேலும், வகுப்பறையில், மாணவர்களை வாசிக்கச் செய்தல், கலந்துரையாடச் செய்தல், விளக்கச் சொல்லுதல், வினாவங்கி தயாரிக்கச் செய்தல், கருத்தரங்கம் போல நடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தி அவர்களது ஆளுமையை வளர்க்கச் செய்யலாம்.

## இலக்கியம் கற்பித்தலின் நோக்கம்

இலக்கியம் ஏன் படிக்க வேண்டும்? ஏன் கற்பிக்கப்படுகிறது? என்பதற்குரிய காரணங்கள் பின்வருமாறு முன்வைக்கப்படுகின்றன.

"அறநெறியில் நிற்றல், உணர்ச்சியைத் தூண்டுதல், ஆய்வுச் சிந்தனை வளர்த்தல் மக்கட்பண்பை வளர்த்தல், கற்பனை ஆற்றலை வளர்த்தல், இறையுணர்வை உண்டாக்குதல், மொழிப்பற்றை உண்டாக்குதல், கவி புனையத் தூண்டுதல், கருத்துணர்தல் ஆற்றலை வளர்த்தல், இலக்கியப் பற்று உண்டாக்குதல்" ..(இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறைகளின் நன்மைகள், நித்யா சேகர் & காயத்ரி கணேசன்—வலைதளப் பதிவு-SCRIBD )

இவை சார்ந்த கூறுகளை இன்றைய சமூகப்-பண்பாட்டோடு ஒப்பிட்டுக் காட்டிக் கற்பித்தல் வேண்டும்.

## இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறை

இலக்கியக் கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு இலக்கியம் கற்பதன் அவசியம், இலக்கியம் எடுத்துக்கூறும் கூறுகள், இலக்கியம் எழுந்த சூழல், இலக்கியப் பண்புகள், காலந்தோறும் இலக்கியம் எடுத்துரைக்கும் இலக்குகள், இலக்கிய வரலாறு போன்ற இலக்கியப் பாடங்களை நடைமுறைப் பண்பாட்டோடு அணுகி கற்பித்தல் வேண்டும். செய்யுட்கள், சிறுகதை, நாவல், கட்டுரை, உரைநடை முதலிய இலக்கிய வகைகளைப் பயிற்சி கொடுப்பதன் மூலம் கற்பித்தல் மாணவர்களுக்கு இலக்கியம் படிக்கும் ஆர்வம் ஏற்படுத்தலாம்.

மொழியின் அமைப்போடு இலக்கியம் கற்பித்தல் அவசியமாகிறது. இலக்கியம் கற்பித்தலுக்கு இரண்டு முக்கிய பயன்பாடுகளைக் கார்த்திகேசு சிவத்தம்பி முன் வைக்கிறார்.

1. மொழியாட்சித் திறனை வளர்த்தல்
2. பண்பாட்டைக் கற்பித்தல்

மாணவர்கள் மொழியின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான வாயில் அம்மொழியின் இலக்கியமே ஆகும். ஆனால், இலக்கியம் கற்பித்தல் என்பது மாணவர்கள் இலக்கியத்தை அனுபவிக்க வழிவகுப்பதாகவும் அந்த அனுபவம் ஏற்படுவதற்கான காரணிகளை அறிந்து கொள்வற்கான திறனையும் பயிற்றுவித்தலாகும். (கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல், ப.31)

இலக்கியம் என்பது மனிதப் பண்புகளைக் கற்பிக்கிறது என்ற அடிப்படையிலான கருத்தினை மாணவர்களிடத்தே கொண்டு செல்ல வேண்டும். இலக்கியம் கற்பித்தலில், கவிதை என்கிற செய்யுள் முக்கியம் இடம் பெறுகிறது. செய்யுட்களைக் கற்பிக்கின்ற பொழுது, பொழிப்புரை- விளக்கவுரை என்ற அளவில் நின்று விடாமல் அவ்விலக்கியப் பகுதியின் உள்ளே இருக்கும் இலக்கணம் சார்ந்த கூறுகள், நயப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், இலக்கியம் கூற வரும் கருத்து, கற்பனை சார்ந்த பகுதிகள், மாணவர்களின் புரிந்து கொள்ளும் தன்மைக்கு ஏற்ப பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனைக்கு இடம் அளிக்கக்கூடிய படைப்புகள் - படைப்பிலக்கியம் குறித்த பயிற்சிகளைக் கொடுத்து மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். தொடக்ககால மரபு சார்ந்த கற்பித்தலோடு (குருகுலக்கல்வி)

மாணவர்களுக்கு ஆர்வம் - ஆய்வுச்சிந்தனை - புதிய சிந்தனை திறன்கள் ஆகியன ஏற்படக்கூடிய அணுகுமுறைதான் நவீன கற்பித்தலில் பின்பற்றப்பட வேண்டும்.

இலக்கியம் கற்பிக்கின்றபொழுது கையாளப்படுகின்ற வழிமுறைகள்,

1. இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கருத்து மற்றும் சொற்கள் குறித்து அறிமுகப்படுத்தல்,
2. இலக்கியப் பாடப் பகுதிகளை (கவிதை, உரைநடை போன்றன) சத்தமாக வகுப்பில் வாசிக்க வைத்தல்.
3. சீர்பிரித்து ஓசையுடன் - தெளிவுடன் வாசிக்க வைத்தல்.
4. இலக்கியப் பகுதிக்குரிய கருத்துக்களை மாணவர்கள் அறிந்த முறையில் எடுத்துரைக்கச் செய்தல். அப்பொழுது மாணவர்களுக்கு அப்பாடப்பகுதியின் கருத்துக்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.
5. சில இலக்கியப் பாடங்களை மனனம் செய்யத் தூண்டுவதால் நினைவாற்றல் பயிற்சியும் வந்து விடுகிறது. (சான்றாக, நூற்பாக்கள், சில செய்யுட் பகுதிகள்)
6. படைப்பாற்றலை வளர்க்கும் பகுதிகளான கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல், நாடகம் படைத்தல், கட்டுரை எழுதுதல் போன்ற பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் அணுகினால் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படுவதுடன் படைப்பாற்றல் திறனும் வளர்கிறது. தொடர்ந்து, மாணவர்கள் படைத்த படைப்புகளை ஒன்று சேர்த்து ஒரு கோப்பாகத் தயார் செய்யும்பொழுது மாணவர்களின் ஆளுமை வெளிப்பட வாய்ப்பு ஏற்படும். நாடகம் குறித்த செயல்பாட்டில் குழுக்கள் பிரித்து குழுவிற்கென்று தலைப்பு தந்து நடிப்பதற்கு உற்சாகப்படுத்தலாம். நடிப்புத் திறன் வெளிப்படவும் வாய்ப்பு உண்டாகும்.

ஆகவே, ஆசிரியர் மட்டுமே கற்பித்தலில் ஈடுபட்டு வருவதோடு மாணவர்களையும் இணைத்து ஆசிரியருக்குச் சமமாக கொண்டுவரும் போது திறன்மிக்க வகுப்பறையாக மாறுவதோடு மாணவர்களின் திறன்களும் வெளிப்பட வாய்ப்பு உண்டாகிறது. இலக்கியம் படிக்க ஆர்வமும் ஏற்படுகிறது.

மேலும், இலக்கியங்களைக் கற்பிக்கின்றபோது, நவீன காலத்தில் முக்கிய இடம்பெறுவதான திறனாய்வுக் கூறுகளையும் இலக்கிய மாணவர்கள் மத்தியில் புகுத்திக் கொண்டே வருதல் அவசியம். மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை வளர்ப்பதற்கும் ஆசிரியரின் பங்கு மிகப்பெரிது. அதற்காக, சிறுதைகளைப் பயிற்சிக்காக கொடுத்து திறனாய்வுச் சிந்தனையை வளர்க்க முடியும். அந்த வகையில், இலக்கியக் கல்வி படிக்க வரும் மாணவர்களுக்கு அச்சமின்றி ஆர்வம் ஏற்படுகின்ற அளவிற்கு இலக்கியம் கற்பித்தல் அணுக வேண்டும்.

## இலக்கியம் கற்பித்தலில் தொழில்நுட்ப உதவிகள்

இலக்கியம் கற்பிக்கின்ற பொழுது, நாம் இருக்கிற காலக்கட்டம், சமூக அமைப்பு, உலகம் தழுவிய கருத்துகள் - கோட்பாடுகள் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்பன குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கற்றல் முறையை ஊக்குவிக்கலாம். இதுபோன்ற முறையில் கற்பித்தல் பணி நடைபெறுகிற பொழுது தொழில்நுட்ப உதவியுடன் செயல்பட வேண்டும். புத்தகம் - கரும்பலகை என்றில்லாமல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் கற்றல் நடைபெறலாம் என்ற ஆர்வத்தை மாணவர்களுக்குக் கொடுத்தல் அவசியம்.

குறிப்பாக, மாணவர்களுக் கணினிப் பயன்பாடு, இணையதளம் பயன்படுத்தும் முறை குறித்து ஊக்குவிக்கலாம். ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கின்ற பொழுது PPT

பயன்படுத்துதல், காட்சிப் படங்கள் வழிக் கற்பித்தல், இணையதளங்கள் வழிக் கற்பித்தல் போன்ற முறைகளில் ஈடுபடுகின்ற பொழுது மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வம் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்களையும் அவர்களது ஒப்படைப்பு (Assignment), கருத்தரங்கம் போன்ற பயிற்சிகளுக்குத் தொழில்நுட்ப உதவியுடன் கற்பதற்குத் துணை நிற்கலாம் (தமிழ் கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பத்தின் பங்கு, பா.நாகேஸ்வரி, 2021).

இன்றைய சூழலில் வீட்டிலிருந்தே கல்வி கற்றல் என்ற நிலை உருவாகியுள்ளது. அதற்குரிய வெளிப்பாடான Google meet, Zoom, Webex போன்ற செயலிகள் வழிக் கற்பித்தல் நடைபெற்று வருகிறது. கூகுள் வகுப்பறை வழியாக மாணவர்களைப் பங்கேற்கச் செய்து கற்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேரடி வகுப்பறை போலவே அனைத்துச் செயல்பாடுகளும் இவ்வகுப்பறை வழியே நடைபெற வாய்ப்புள்ளது. இதைத்தவிர, மாணவர்கள் தங்களது பாடங்கள் தொடர்பாக - ஆய்வு தொடர்பாக புத்தகங்கள் பார்ப்பதோ (அல்லது) கருத்துக்கள் தேடுவதோ அனைத்தும் வீட்டிலிருந்து கொண்டே இணையதள வசதிகள் துணைகொண்டு அறிந்து கொள்ள மாணவர்களைத் தூண்ட வேண்டும்.

மேலும், சமூக ஊடகங்களின் வழி (முகநூல், டிவிட்டர், யூட்யூப், இன்ஸ்டாகிராம்) கற்பித்தலை மேற்கொள்ளலாம். வகுப்பிற்கென்று வலைப்பூ (Blog) ஒன்று உருவாக்கி மாணவர்களின் படைப்புகளை அதில் பதிவிடலாம். அப்பொழுது மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டு ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவர்.

இன்றைய காலச்சூழலுக்கு ஏற்றாற்போல் மாணவர்களைக் கற்கத் தூண்டும் வகையில் இலக்கியக் கல்வி அமைதல் அவசியம். அதற்கு அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அவசியமாகிறது. மாணவர்களைக் கற்றல் செயலில் முழுவதுமாக ஈடுபடுத்தும் வகையில் பல்வேறு கோணங்களில் பல பயிற்சிகள் வழியாக கற்கத் தூண்டுதல் என்பது அவசியமாகிறது. இலக்கியம் வாசித்துவிட்டு மனனம் செய்வதோடு இலக்கியக் கல்வி நின்றுவிடக்கூடாது. அதனைச் செயல்முறையோடு - செய்முறையோடு - தொழில்நுட்பக் கருவிகள் உதவியுடன் கற்பித்தல் பணி செயல்படுத்தும்பொழுதுதான் மாணவர்கள் அனைவரும் கல்வி அறிவை முழுமையாகவும் திறமையாகவும் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

### கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

இன்றைய சூழலில் இணையவழிக் கற்பித்தல் கட்டாயம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, எதிர்வரும் காலக்கட்டங்களில் ஆசிரியரல்லா வகுப்பறை கூட உருவாகலாம். எவ்வாறு இருப்பினும், இன்றைய காலக்கட்டத்தில் இணைய வழியாக (Online) பாடங்கள் நடத்தி வருகிற சூழலில் அனைத்து மாணவர்களும் அவர்கள் வீட்டிலிருந்து கொண்டே வகுப்பிற்குள் இணைந்து பங்கேற்பதில்லை. காரணம் மாணவர்கள் அனைவரும் நகர்ப்பகுதி, கிராமப்பகுதி மற்றும் மலைசூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்து வருவதால் இணையதள வசதி (Internet connection) விரைவாகக் கிடைப்பது அரிதாக உள்ளது. அதனால், 100 சதவீத மாணவர்களை Online வகுப்பில் காண்பது என்பது இயலாத ஒன்றாக உள்ளது. குறிப்பாக, மாணவர்களின் பொருளாதார வசதியின் அடிப்படையில்தான் அவர்களது கணினி, கைபேசி இவற்றின் திறம் இருக்கும். இதுவும் ஒரு காரணம் என்பது மாணவர்களின் கருத்துக்கேட்பு வழியாக அறிய முடிகிறது.

மேலை நாடுகளின் வளர்ச்சிபோல நம் இந்திய நாடு பொருளாதாரத்தில் - மக்களின் வாழ்வாதாரத்தில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும். அப்பொழுதுதான், இணையவழிக் கற்றல் முறை நூறு சதவீதம் வெற்றியை அடைய முடியும். அரசு கல்லூரிகளில் படிக்க வரும் மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்;

இணைய வசதி (Internet Connection) பெற முடியாத நிலையில் இருப்பவர்கள். அத்தகையவர்கள் இணையவழிக் கற்றலில் முழுமை அடைய முடிவதில்லை.

புதிய கல்விக் கொள்கைக்கான - நவீனத் திட்டமான இணையவழிக் கற்றல் என்பது வளர்ச்சியடைய மேலும் சில காலங்கள் ஆகலாம். இருப்பினும், மரபுப்படி நேரடி வகுப்பில்- வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களைச் சந்திப்பதும் மாணவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதுமான கற்றல்- கற்பித்தல் முறையில் ஏற்படும் மகிழ்ச்சியானது இணைய வழிக் கற்றல்- கற்பித்தலில் கிடைப்பது சற்றுக் குறைவாகவே உள்ளது.

எவ்வாறு இருப்பினும், நேரடி வகுப்பறையில் நவீன தொழில்நுட்ப கருவிகள், இணையம், படக்காட்சிகள் இவற்றின் உதவியுடன் கற்பித்தலில் ஈடுபடும்பொழுது,

"உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கௌக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப" (நன்னூல்,எழுத்து.36)

என்ற நன்னூல் சூத்திரத்திற்கு ஏற்ப பாடம் கற்பிக்கும்முறை அமைய வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களும்,

"பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவிவாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்து" (நன்னூல், எழுத்து.40)

என்பதாகக் கற்பதில் விருப்பம் கொண்டவராகவும் குறிப்பாக வகுப்பறையில் இருந்துகொண்டு கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டவராகவும் இருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.

**முடிவுரை**

- இலக்கியக் கல்வியை நடைமுறைப் பயன்பாட்டோடு கற்பித்தல் வேண்டும்.
- மாணவர்களிடத்து மதிப்பீட்டு உணர்வை வளர்க்கும் இலக்கியக் கல்வியைப் பயிற்றுவிக்கலாம்.
- இலக்கியக் கல்வியில் அழகியல் சார்ந்த கூறுகள், சமூக பொறுப்புகள் குறித்த செய்திகள், மனிதப் பண்புகள் ஆகியன குறித்த புரிதல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
- கற்பித்தல் செயல்முறைகளில் விரிவுரைகள், கலந்துரையாடல்கள், பின்னூட்டங்கள், வினாக்கள் வினவுதல், படைப்புக் குறித்துப் பயிற்சி அளித்தல் போன்ற உத்திகளைப் பின்பற்றி மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தலாம்.
- குறிப்பாக, தொழில்நுட்ப கருவிகளுடனும் இணையதளம் சார்ந்த கருத்துக்களுடனும் இன்றைய காலத்தோடு ஒப்பிட்டுப் பயிற்றுவிப்பதாலும் கற்பித்தலில் வெற்றியடைய முடியும்.

**துணைநின்றவை**

**I. நூல்கள்**

- இளவரசு சோம.(ப.ஆ.), (2010), நன்னூல் - எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சிவத்தம்பி கார்த்திகேசு, (2012), தமிழ் கற்பித்தல், NCBH, சென்னை.

**II. வலைதளம்**

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை, இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (2016-17) **'கற்றலும் கற்பித்தலும்'** 'கற்பிக்கும் தன்மை' - ப.ஜெகநாதன், வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www/tnteu.ac.in
- **'கற்பித்தல் முறை' - தமிழ் விக்கிப்பீடியா,** https://ta.m.wikipedia.org/wiki/
- **'இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறைகளின் நன்மைகள்', நித்யா சேகர் & காயத்ரி,** http://www.scribd.com
- **'தமிழ் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு'** - பா. நாகேஸ்வரி, தமிழ் இணைய ஆசான் (Tamil Computing Journal) செப்டம்பர் 4, 2021 - வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www.tamilcomputingjournal.org

*****************

# மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் - அறிஞர்களின் சிந்தனைகள் Psychology of learning in human development - Thoughts of scholars

## முனைவர் ஜெ.கவிதா | Dr.J.Kavitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore. MAIL ID: jkavitha@psgrkcw.ac.in, kavithamahendiran1973@gmail.com,phono no: 948757527, ORCID : https://orcid.org/0000-0002-3938-1985

**ஆய்வுச் சுருக்கம்**

சைக்காலஜி துறையானது மனிதனுடைய மனதையும் நடத்தையையும் பற்றி ஆராயும் ஒரு துறையாகும். இத்துறையில் வல்லுனர்களை சைக்காலஜிஸ்ட் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தனிமனிதனின் புலனுணர்வு, அறிவாற்றல், செயல்திறன், மன அழுத்தம், ஆளுமை, நடத்தை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து உரிய தீர்வு அளிக்கின்றனர். உளவியல் சார்ந்த அறிவானது அன்றாட வாழ்வில் உள்ள கல்வி, குடும்பம், தொழில், உள்ளிட்டவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது. மனித வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகள், தீமைகள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை சைக்காலஜி துறையானது விளக்குகிறது. மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் என்ற தலைப்பில் எண்ணற்ற உளவியல் அறிஞர்கள் விளக்கவுரை கொடுத்துள்ளனர். இவ்வாறான விளக்கவுரையை கற்றுத்துர மாணவர்களுக்கு எங்கு?, யார்?, எப்படி?, எங்கே? எப்போது கற்கப்படுகிறது என்ற வினாவிற்கு விடையாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்புவரை நடந்தேறி வருகின்றது.